**சி.டபிள்யூ.ஈ கொன்ஸ்ட்ரக்சன் என்ட் இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட் - 2016**

---

சி.டபிள்யூ.ஈ கொன்ஸ்ட்ரக்சன் என்ட் இன்ஜினியரிங் (பிரைவட்) லிமிடட் இன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஒன்பது மாத காலத்திற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (சபை) பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) கீழே காண்பிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கும் நேர்எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 152,113,025 பெறுமதியான பின்வரும் கணக்கு விடயங்களை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியாதுள்ளது.

| | கணக்கு விடயம் | பெறுமதி<br>ரூபா | கிடைக்கப் பெறாத சான்று |
|---|---|---|---|
| (i) | உப ஒப்பந்த காரர்களுக்கு செலுத்த வேண்டியவை | 19,363,597 | பட்டியல்கள் |
| (ii) | 2016 ஏப்ரல் 01 இல் உள்ள வாறு செலுத்த வேண்டிய பிடிகாசு | 11,097,065 | பட்டியல்கள், ஒப்பந்த உடன்படி க்கை மற்றும் செய்த வேலைகள் அறிக்கை |
| (iii) | விடுவிக்கப்பட்ட பிடிகாசு | 5,860,484 | பட்டியல்கள், ஒப்பந்த உடன்படி க்கை மற்றும் செய்த வேலைகள் அறிக்கை |
| (iv) | மீளளித்த பெறுமதிசேர் வரி | 26,402,994 | பட்டியல்கள் |
| (v) | தேசத்தை கட்டியெழுப்புதல் வரி | 4,060,326 | பட்டியல்கள் |
| (vi) | பதிவுக் கட்டணம், கேள்வி கோரல் கட்டணம் (மீளளிக்கப் படாத) மற்றும் தாமதக் கட்டணம் (கேள்விகோரல்) | 657,000 | பற்றுச்சீட்டுக்கள் |
| (vii) | முற்பணக் கொடுப்பனவு | 55,509,640 | பட்டியல்கள் மற்றும் தீர்ப்பனவு உறுதிச்சீட்டுகள் |

| | | | |
|---|---|---|---|
| **(viii)** | செலுத்த வேண்டிய மதியுரைக் கட்டணம் | 4,266,649 | பட்டியல்கள் மற்றும் தீர்ப்பனவு உறுதிச்சீட்டுகள் |
| **(ix)** | பொருட்களின் வழங்கல் - கடன்கொடுத்தோர் | 24,895,270 | பட்டியல்கள் மற்றும் பொருள் பெறுவனவு பத்திரங்கள் |
| | | ---------------- | |
| | | **152,113,025** | |
| | | ========= | |

(ஆ) இரண்டு அழைப்பு வைப்புக்கள் தொடர்பாக பெறப்பட வேண்டிய ரூபா 1,722,794 வட்டி நிதிக்கூற்றுக்களில் பதவிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) கடன்பட்டோரிடமிருந்து கிடைத்திருந்த ரூபா 68,923,201 தொகை கடன்கொடுத்தோராக பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் ஒத்த தொகையால் அதிகரித்துக் கூறப்பட்டிருந்தது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, இந்த நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 2.2 ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதித் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவில் வேண்டப்பட்டவாறு நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்:

(அ) அபிப்பிராயத்தின் அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயமாவது:

- மேலே குறிப்பிடப்பட்டவாறு, கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களையும் விளக்கமளிப்புகளையும் நான் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| விதிகள் / வழிகாட்டல்களுக்கான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | |
| I. பிரிவு 5.2.5 | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| II. பிரிவு 9.2 | கம்பனியின் பதவியணியினர் கோப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.	நிதி மீளாய்வு**

**3.1	நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் ஒன்பது மாத காலப்பகுதிக்கான கம்பனியின் செயற்பாட்டு விளைவு ரூபா 2,233,083 வரிக்குப் பிந்திய தேறிய இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் ரூபா 677,266 ஆக காணப்பட்டதனால் நிதி விளைவுகளில் ரூபா 1,555,817 முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. மொத்தச் செலவினத்தில் ஏற்பட்டிருந்த ரூபா 7,360,701 அதிகரிப்புக்கு எதிராக மொத்த வருமானம் ரூபா 8,515,819 ஆல் அதிகரித்திருந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமாகும்.

**4.	வகைகூறலும் நல்லாளுகையும்**

**4.1	கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டு முதல் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2	செயல் நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனி செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

**4.3	உள்ளகக் கணக்காய்வு**

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4	கணக்காய்வுக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வுக் குழுவொன்று நிறுவப்பட்டிருக்கவில்லை.

**5.	முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பிரப்புகளின் பால் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள்** | **ஆவதானிப்பு** |
| --- | --- |
| சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்களை மெய்மையாய்வு செய்வதற்காக கணிப்பீட்டுச் சபையை நடாத்தத் தவறியமை. |
| கணக்கீடு | பேரேட்டிலுள்ள கணக்கு மீதிகளை ஆதாரப்படுத்தும் ஆவணங்களை நியாயப்படுத்த முடிந்திருக்காமை |
| மனித வள முகாமைத்துவம் | பதவியணி கேப்புக்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெறத் தவறியமை |